# தயாநிதிமாறன் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

அவர்கள் உங்கள் கட்சிக்கு வரும் கணமே தூய்மையாகி விடு கிறார்கள்? அது என்ன பார்முலா? இது மக்களின் தீர்ப்பு அல்ல, உங் கள் கட்டாயத் தீர்ப்பு!

மத்திய பிரதேசத்தில் என்ன செய்தீர்கள், காங்கிரஸ் எம். எல்.ஏ.க்கள் விலைக்கு வாங்கப்பட் டதை உறுதி செய்தீர்கள். முந்தைய கர்நாடக சட்டசபையில் என்ன செய்தீர்கள்? எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்கினீர்கள். அந்தப் பணம் எங்கிருந்து வருகிறது என்று தெரியவில்லை! நீங்கள் ஊழல் செய்யவில்லை என்று சொல்கிறீர் கள், அதனால் நான் கேட்கிறேன், இதை எங்கே பெறுகிறீர்கள்? உண் மையைப் பேசும்போது சுடுகிறதோ?

இந்த திருத்தச் சட்டத்திற்கு எதி ராக, திமுகவின் நிலைப்பாட்டை நான் பேசுகிறேன். ED இயக்குநரின் பதவிக் காலத்தை மூன்று முறைக்கு மேல் நீட்டிக்க முடியாது என்றும், ஜூலை 31 அவரது பதவிகாலத் தின் முடிவு தேதி என்றும் உச்ச நீதி மன்றம் கூறியது. ஆனால் நீங்கள் திரும்பிச் சென்று, நிர்வாக அதிகா ரத்தில் மிகவும் வல்லமை வாய்ந் தவர் என்றும், பத்வாவை வழங்கக் கூடிய ஒரே மனிதர் அவர்தான் என்றும் கூறி நீட்டிப்பு கேட்டீர்கள்! ஆகவே, நிர்வாகத்தின் முக்கியத்துவம் உங்களுக்குத் நன் றாகவே தெரியும். அது ஒரு பொம்மை அல்ல, தேர்ந்தெடுக்கப் பட்ட அரசாங்கத்தின் கைகளில் தான் இருக்க வேண்டும்.

நிர்வாக சேவைகள் தில்லி அர சின்கீழ் வர வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் மிகத் தெளிவாகத் தெரி வித்து தீர்ப்பு வழங்கியது. எனவே நீங்கள் உடனடியாக ஒரு அரசா ணையைக் கொண்டு வந்தீர்கள்.

சட்டங்களை இயற்றும் உச்ச அதிகாரம் பாராளுமன்றத்திற்கே என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கி றோம். அதனால்தான் நாம் சட்டமி யற்றுபவர்கள் என்று அழைக்கப்ப டுகிறோம். இங்கு ஏதேனும் சட்டம் இயற்றப்படும்போது, பேசுவதற்கு எங்களது உரிமையை நீங்கள் உறு திப்படுத்த வேண்டும், நீங்கள் தவ றான சட்டத்தைக் கொண்டு வருகி றீர்கள் என்றால், நாங்கள் அதைச் சொல்ல வேண்டும்.

### டெல்லி அரசை கட்டுப்படுத்த நினைக்கிறீர்கள்!

உங்கள் நோக்கங்கள் இங்கே மிகத்தெளிவாக உள்ளன, நீங்கள் டெல்லி அரசைக் கட்டுப்படுத்த விரும்புகிறீர்கள். அது ஏன்? உங்க ளிடம் வரும்போது மட்டும், நிர்வா கப் பணியாளர்கள் நீட்டிக்கப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்.

ஆம் ஆத்மி அளித்த வாக்குறுதி கள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்று உங்கள் உறுப்பினர் ஒருவர் பேசி னார். அது எப்படி நிறைவேற்றப்படும்? நீங்கள் எப் போதும் அதிகாரிகளை திணறடிக்கிறீர்கள்! அவற்றில் எதையும் செயல்பட நீங்கள் அனு மதிக்கவில்லை. அதிகாரிகள் செயல்படாமல் எப்படி நிறைவேற் றுவார்கள்? இந்த ஆம் ஆத்மி அர சாங்கம் ஒருபோதும் வாக்குறுதிகள் நிறைவேற்றவில்லை என்று சொல்ல, இதை ஒரு தேர்தல் மேடையாக பயன்படுத்த விரும்பு கிறீர்கள்.

மேலும் கூட்டணி பற்றி நீங்கள் பேசுவீர்கள்? இதைத்தான் தமிழில் "சாத்தான் வேதமோதுகிறது" என்று கூறுவார்கள்.

நீங்கள் புனிதமற்ற கூட்டணியில் ஈடுபட்டுள்ளீர்கள். நீங்கள் உங்கள் குடும்பத்தையும் உங்கள் கட்சியை மட்டுமே கவனித்துக்கொள்ளுபவர் கள். எங்கள் கூட்டணிக் கட்சிகளை எப்படிக் கவனித்துக் கொள்வது என்பது எங்களுக்குத் தெரியும், இந் தியா கூட்டணி மிகவும் வலுவாக உள்ளது. அடுத்து, 2024, நாங்கள் ஆட்சியில் இருப்போம், நீங்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்வீர் கள்! நீங்கள் செய்த துஷ்ப்ரயோகமெல்லாம், நாங்கள் செய்ய மாட்டோம். ஆனால், உங்க ளைப் போல் அல்லாமல், சிபிஐ, ஈடி மற்றும் வருமான வரித்துறை ஆகியவை ஒழுங்காக நடந்துகொள் வதையும், தங்கள் வேலையைச் சரியாகச் செய்வதையும் நாங்கள் உறுதி செய்வோம். எதைச் செய்தா லும் அதைச் சரியாகச் செய்வார் கள், அந்த நேரத்தில் கடைசியாகச் சிரிப்பது யார் என்று பார்ப்போம்.

தாங்கள் கொண்டு வரும் சட்டத் தில் 3ஏ பிரிவு இருக்காது என்பதை உறுதி செய்திருக்கிறார்கள்.

உள்துறை அமைச்சர் தனது அறிக்கையில், 3 பேர் கொண்ட குழுவை உருவாக்குவதை கட்டா யமாக்குகிறது என்றும், டெல்லி நாட்டின் மிக முக்கியமான பகுதி யாக இருப்பதால் இந்த சட்டம் கொண்டு வரப்படுகிறது, அனைத்து வெளி நாடுகளும் தங் கள் தூதரகங்களை இங்கு வைத் துள்ளன, பாதுகாப்பு மிகவும் முக்கி யமானது, உள்ளூர் அரசாங்கம் வந்து தொந்தரவு செய்யாமல் பார்த் துக் கொள்ள வேண்டும் என்றெல் லாம் கூறினார்

ஐயா, எப்படியும் தேசிய தலைந கர் பிராந்தியத்தின் பாதுகாப்பு உங் களிடம்தான் உள்ளது. அதற்கு யார் பொறுப்பு? உள்துறை அமைச்சகம், மாநில அரசு அல்ல. மேலும் சட்டம் ஒழுங்கில் ஏதேனும் தவறு நடந் தால் அதற்கு நீங்களே பொறுப்பு, அதற்கு வேறு யாரும் பொறுப் பல்ல. உங்கள் பொறுப்புகளில் இருந்து பின்வாங்க முயற்சிக்காதீர்கள்! டெல்லியில் பலாத்காரங்கள் நடக்கின்றன என் றால் அதற்கு காரணம் உங்கள் சட் டம் ஒழுங்கு பலவீனமாக உள்ளது. டெல்லியில் கொள்ளை நடக்கிறது என்றால் அதற்கு காரணம் உங்கள் சட்டம் ஒழுங்கு சரியில்லை!

இப்போது அவர்கள் அமைத்த குழுவைப் பார்ப்போம். இந்தக் குழு வில் தலைமைச் செயலாளர், உள் துறை முதன்மைச் செயலாளர் மற் றும் முதல்வர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். மூன்று உறுப் பினர்களில் இருவரை ஒன்றிய அரசு நியமிக்கிறது. கோரம் (Quorum) இரண்டு உறுப்பினர்கள் மட்டுமே! நாளை, முதல்வர் வெளி யூர் செல்லலாம் அல்லது வெளி நாடு செல்லலாம்... எந்த அதிகா ரியை நியமிக்க வேண்டும் என்பதை இந்த இருவர் முடிவு செய் யலாம். அதிலும், இத்தனைக்குப் பிறகும், மூவரும் ஒன்றாக அமர்ந்து, ஏதாவது ஒரு அதிசயத் தின் மூலம், ஒரு முடிவுக்கு வந்தா லும், அந்த முடிவை, லெப்டினன்ட் கவர்னரால் முறியடிக்க முடியும். அதனால் என்ன பயன்? நீங்கள் அதிகாரங்களை வழங்குவதாகச் சொல்கிறீர்கள் ஆனால் அது இல்லை! குழந்தை அழுகையை நிறுத்துவதை உறுதிசெய்ய இனிப் பைக் காட்டுகிறீர்கள், பின்னர் இனிப்பைத் திரும்பப் பெறுகிறீர் கள்.

### ஆளுநர்களை அரக்கர்களாக மாற்றி வருகிறீர்கள்!

கடந்த 9 ஆண்டுகளாக, நீங்கள் ஆளுநர்களை அரக்கர்களாக மாற்றி வருகிறீரகள். திமுக எப்போதும் ஆளுநர் நியமனத்திற்கு எதிரானது, எந்த மாநில அரசுக்கும் ஆளுநர் தேவையில்லை என்பதை மிகத் தெளிவாகக் கூறி வருகிறது. தி.மு.க. நிறுவனர் பேரறிஞர் அண்ணா, ஆட்டுக்கு தாடி தேவை யில்லை என்பது போல, மாநிலத் துக்கும் ஆளுநர் தேவையில்லை என்று கூறியுள்ளார். 13 மசோதாக் கள் ஆளுநர் மாளிகையில் கிடப் பில் போடப்பட்டுள்ளன. என்ன காரணங்களுக்காக, யாருக்கும் தெரியாது. அதேசமயம் கவர்னரி டம் ராஜ்பவனின் ஆடம்பரங்கள் உள்ளன.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து தயாநிதி மாறன் பேசிக்கொண்டிருக்கும்போதே, பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் கள் அவரை பேசவிடாமல் சத்த மிட்டு தடுத்தனர். இச்செயலை கண்டித்து தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய் தனர்.

> இந்த திருத்தச் சட்டத்திற்கு எதிராக, திமுகவின் நிலைப் பாட்டை நான் பேசுகிறேன். ED இயக்குநரின் பதவிக் காலத்தை மூன்று முறைக்கு மேல் நீட்டிக்க முடியாது என் றும், ஜூலை 31 அவரது பதவிகாலத்தின் முடிவு தேதி என் றும் உச்ச நீதிமன்றம் கூறியது. ஆனால் நீங்கள் திரும்பிச் சென்று, நிர்வாக அதிகாரத்தில் மிகவும் வல்லமை வாய்ந் தவர் என்றும், பத்வாவை வழங்கக்கூடிய ஒரே மனிதர் அவர்தான் என்றும் கூறி நீட்டிப்பு கேட்டீர்கள்!

---

## பத்திரப் பதிவு - வணிக வரித்துறைகளில் சாதனை!

# தமிழ்நாடு அரசின் திட்டமிடலே முக்கிய காரணம்!

## தினகரன் நாளேடு தலையங்கம்!




சென்னை, ஆக.4-

தமிழ்நாட்டில் பத்திரத் துறை வணிக வரித் துறைக ளில் பெருமளவு சாதனை படைத்து வருவதற்கு அர சின் திட்ட மிடலே முக்கிய காரணம் என்று தினகரன் நாளேடு தலை யங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அது வருமாறு:

ஒரு மாநிலத்தின் பொருளாதார தேவையை பூர்த்தி செய்யும் டாப் 3 துறைகளில் பத்திரப்பதிவு மற்றும் வணிக வரித்துறை யும் ஒன்று. கடந்த அதிமுக ஆட்சியில் செயலற்று இருந்த, வேதனை தந்த துறைகளில் இதுவும் ஒன்று என்று கூறலாம். ஆனால், திமுக ஆட்சிப் பொறுப் பேற்ற பின்பு, இத்துறை ஒவ்வொரு நிதியாண்டி லும் வருவாயை குவித்து சாதனை படைத்து வருகி றது. இதற்கு தமிழக அர சின் திட்டமிடலே முக் கிய காரணம்.

தமிழ்நாட்டின் பொரு ளாதார இலக்கை வரும் 2030ம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்கன் டாலர் பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் முதல் வர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து செயலாற்றி வருகிறார். அதற்கேற்ப மாநில நிதி வருவாயை பெருக்கும் வகையில் முத லீடுகளை ஈர்த்து வருகி றார். இதற்காக தொடர்ந்து முதலீட்டா ளர்கள் மாநாட்டை நடத்தி வருகிறார். மேலும், வெளிநாடுகளுக் கும் சென்று, பல முக்கிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங் களை மேற்கொண்டுள் ளார். இதன்காரணமாக, தமிழகம் கடந்த 2 ஆண்டு களாக தொழில் துறையில் அதிக அளவு முதலீடுகளை ஈர்த்துள்ளது. 2021 மே மாதம் முதல் இதுவரை சுமார் 4 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வேலை வாய்ப்பு பெறும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங் கள் கையெழுத்தாகி உள் ளன. இதன்மூலம் சுமார் 73 லட்சம் கோடி மதிப்பி லான முதலீடுகள் பெறப் பட உள்ளது. இதன் உச்சக் கட்டமாக, சென்னையில் அடுத்தாண்டு ஜன. 10, 11ம் தேதி உலக முதலீட் டாளர்கள் மாநாடு நடக்க உள்ளது. இதில் பல்வேறு நாடுகளை சேர்ந்த முன் னணி நிறுவனங்கள் பங் கேற்கின்றன. இதன்மூலம் முதலீடுகள், வேலை வாய்ப்பு மேலும் அதிகரிக் கும் வாய்ப்புகள் ஏற்பட் டுள்ளன.

தொழில் மற்றும் பொருளாதாரம், கல்வி வளர்ச்சியில் நம்பர் ஒன் மாநிலமாக தமிழ்நாட்டை கொண்டு வர வேண்டு மென்ற முனைப்புடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்பட்டு வருகிறார். இதற்கு சாட்சியமாக கடந்த 2 நிதியாண்டிலும் பத்திரப்பதிவுத்துறை வசூலை வாரிகுவித்து சாதனை படைத்து வருகி றது. இதன்படி, பத்திரப்ப திவுத் துறையில் கடந்த நிதியாண்டில் 2021 22 ஜூலை 31ம் தேதி வரை வசூலிக்கப்பட்ட மொத்த வருவாய் 75,539.06 கோடி. இது அப்போது பத்திரப்பதிவுத் துறையில் சாதனை படைத்த வருவா யாக பலராலும் பாராட்டை பெற்றது. இந்த சாதனையை அடுத்த நிதியாண்டிலேயே தகர்த் துள்ளது தமிழக அரசு. நடப்பு நிதியாண்டில் 2023, ஜூலை 31ம் தேதி வரை வசூலிக்கப்பட்ட மொத்த வருவாய் 85,611.47 கோடி. இது கடந்த நிதியாண்டை விட 872.41 கோடி அதிகமா கும். வரும் நிதியாண்டில் இது மேலும் அதிகரிக்கவே வாய்ப்புள்ளதாக இத் துறை அதிகாரிகள் தெரி விக்கின்றனர்.

கடந்த அதிமுக ஆட்சி யில் பத்திரப்பதிவுத் துறை யில் பல்வேறு குளறு படி கள் நிகழ்ந்தன. இதனால் இத்துறையில் வருவாய் வெகுவாக குறைந்து வந் தது. இதனை தடுக்கும்வித மாக பதிவுத்துறையில் கணினிமயமாக்கம் அதிக ரிக்கப் பட்டது. பழைய ஆவணங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டன. மேலும், பத்திர நகல், வில் லங்க சான்று பெறுவதும் எளிமைப்படுத்தப்பட் டது. தாமதத்தை தவிர்க் கும் வகையில் சனிக்கிழ மையிலும் பத்திரப்பதிவு அலுவலகம் செயல்பட வைத்தது. தட்கல் முறை யில் பதிவு செய்யும் திட் டம், பத்திரப்பதிவு செய்ய நேரில் வர வேண்டிய அவ சியமில்லாதது என இத்து றையில் கொண்டு வந்த மாற்றங்களே இச்சாதனை இலக்கு மிக முக்கிய கார ணங்கள் ஆகும்.

ஆட்சிப் பொறுப்பேற் றதில் இருந்து மாநிலத் தின் வளர்ச்சியை முக்கியமாக கொண்டு செய லாற்றி வரும் திமுக அரசுக்கு இது மற்றுமொரு 'சாதனைப்பதிவு' என்றால் அது மிகையல்ல.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

## தமிழினத் தலைவர் கலைஞர் 5 ஆம் ஆண்டு நினைவு நாள்!

# திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் புகழஞ்சலி!

## மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



திருவள்ளூர்ஆக 4 -

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் தமிழனத் தலைவர் கலைஞர் அவர்க ளின் 5 ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திரு வள்ளூர் மத்திய மாவட்ட கழக நிர்வாகிகளுக்கு மாவட்டக் கழகச் செயலா ளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒய்வை மறந்து உடலை மறந்து தமிழை மூச்சாய் வாழ்ந்தனர் நீரே !

சமத்துவமே உனது சங் கம் தானே!

சரித்திரம் படைத்த நல் தலைவன் நீ என் புகழ் ஓங் குக !

80 ஆண்டுகால பொது வாழ்க்கைக்கும், போராட்ட வாழ்க்கைக் கும் சொந்தமானவர்; உலக வரலாற்றில் இது வரை இல்லாத வகையில், திராவிட முன்னேற்றக் கழ கம் எனும் மாபெரும் பேரியக்கத்திற்கு அரை நூற்றாண்டுக் காலம் அசைக்கமுடியாத ஜனநா யகத்தலைவராகவும், அண்ணாவின் அன்புத் தம் பியாகவும் திகழ்ந்தவர். அரை நூற்றாண்டுக் காலம் தமிழகஅரசியலில் தலைப் புச் செய்தியாக இருந்த வர்;ஐந்து முறை முதல மைச்சராக ஆட்சிப் பொறுப் பேற்ற காலத்தில் ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு துறை உருவாக் கியவர் கலைஞர், 1500 பேரை கொண்ட கிராமங் களுக்கும் சாலை வழித்த டம் அமைத்தது கலைஞர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அமைத்தது கலை ஞர்,

குடிநீர் வடிகால் வாரி யம் அமைத்தது கலைஞர், முதலில் இலவச கண் சிகிச்சை முகாம் அமைத் தது கலைஞர், பிச்சைகா ரர்கள் மறுவாழ்வுமையம் அமைத்தது கலைஞர்,

கையில் இழுக்கும் சைக் கிள்ரிக்ஷா ஒழித்து இல வச சைக்கில் ரிக்ஷா கொடுத்தது கலைஞர், இலவச கான்கிரீட் வீடு களை ஒடுக்கப்பட்டோ ருக்கு கொடுக்கும் திட்டம் வகுத்தது கலைஞர்,

சட்டம் குடியிருப்பு (வாடகை நிர்ணயம் போன்றவை) கொண்டு வந்தது கலைஞர்

இந்தியாவிலே முதன் முதலில் காவல் துறை ஆணையம் அமைத்தது கலைஞர், பிற்படுத்தப்பட்டோர் மற் றும் தாழ்த்தப்பட்டோருக் கென துறை அமைத்தது கலைஞர், அரசியலமைப் பில் பிற்படுத்தப்பட்டோ ருக்கான அமைப்பை அமைத்தது கலைஞர்,

அரசியலமைப்பில் BC 31%, SC 18 % ஆக உயர்த் தியது கலைஞர், P.U.C வரை இலவச கல்வி உரு வாக்கியது கலைஞர், மே 1, சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறையாய் அறிவித்தது கலைஞர், வாழ்ந்த மனிதரான நபி கள் நாயகத்தின் பிறந்த நாளை விடுமுறையாய் அறிவித்தது கலைஞர்,

பொருளாதாரத்தில் ஏற் றம் பெற்றிட எண்ணற்ற நல்ல பல சமூக நலத்திட் டங்களைதிறம்படச்செயல் படுத்தி, இந்தியாவின் பல மாநிலங்களுக்கு முன் னோடியாகத் தமிழ் நாட்டை தலைநிமிரச் செய்தவர்; கலைஞர் இந் தியாவிற்கே முன்னோடி யாய் சமூகநீதி காத்து சமத் துவபுரம் அமைத்த சமுதா யக் காவலர்,

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஆகஸ்ட் 7ஆம் தேதி அன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்க ளுக்கு புகழுக்கு மேலும் புகழ்சேர்க்கும் வகையில் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட் பட்ட மாநகராட்சி ஒன் றிய நகர பேரூர் பகுதி ஆகிய பகுதியில் உள்ள ஊராட்சி வார்டு கிளைக ளில் சட்ட மன்ற உறுப்பி னர் மாநில மாவட்ட நிர் வாகிகள் மாநகரம் ஒன்றியம் நகர பேரூர் பகுதி செயலாளர்கள் ஊராட்சி வார்டு கிளை கழக செயலாளர்கள் அணி களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலைஞர் அவர்க ளின் திரு வுருவப் படத்திற்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்திபல்வேறு ஏழை எளிய பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் அன் னதானம் பள்ளி மாணவர் களுக்கு கல்வி உப கரணங் கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் சா.மு.நாசர் எம்.எல்.ஏ தமது அறிக்கை யில் கூறியுள்ளார்.

---

## நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய தொ.மு.ச. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 5 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சிகள்!

## ந.சண்முகசுந்தரம் அறிக்கை!

சென்னை, ஆக. 4 -

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மாநில பொதுசெய லாளர் ந.சண்முகசுந்தரம் அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய தொழிலாளர் முன் னேற்ற சங்கத்தின் மாதந் திர நிர்வாகிகள் கூட்டம் பி.எஸ். ரவிசந்திரன் தலை மையில் நடைபெற்றது. இக்கூட்ட தீர்மானத்தின் படி அரசியல், பத்திரிகை, இலக்கியம், சினிமா, தமிழ்ப்பற்று என எத்திசை திரும்பினும் அத்திசை சூரி யானய் பிரகாசித்த அறி வாலயச் சூரியன் தமிழி னத் தலைர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் நாள் நினைவு தினத்தை யொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெ றம் அமைதிப் பேரணியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ் விட மேம்பாட்டு வாரிய தொ.மு.ச. நிர்வாகிகள் , பொதுக்குழு , செயற்குழு , மகளிர் குழு ,தொழில் நுட்ப குழுவினர் அனைவ ரும் கலந்து கொள்வது எனவும்

தமிழ்நாடெங்கும் உள்ள கோட்ட அலுவல கங்கள் , எஸ்டேட் அலுவ லகங்களில் 5 வது நாள் நினைவு தினம் வரும் ஆகஸ்ட் 7-8-2023ம் தேதி அனுசரிக்கப்பட வேண் டும் எனவும், அந்நாளில் அவரது நினைவை போற் றும் வகையில் அவரின் திரு உருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்தி ஏழை எளிய மக்களுக்கு நண்பகல் உணவு வழங்குவது என வும் தீர்மானிக்கப்பட்டது..

அதே போல் தமிழக மெங்கும் உள்ள அலுவல கப் பனியாளர்கள் முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்க ளின் திருவுருவ படத்திற்கு அஞ்சலி செலுத்தி தங்க ளால் இயன்ற உதவிகளை மக்கள் பயன் பெறும் வகையில் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக் கையில் கேட்டுக்கொண் டுள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்குட்பட்ட திருத்தணி நகரத்தில் அமைந்துள்ள டாக்டர் ராதாகிருஷ்ணன் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மாணவர்களுக்கு நலன் கருதி விளையாட்டு உபகரணங்கள் வாங்கிட மாவட்ட கழக செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் ரூ25 ஆயிரம் பள்ளி தலைமை ஆசிரியரிடம் வழங்கினார். உடன் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் ஆசிரியர்கள் உட்பட பலர் உள்ளனர்.

---

# சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி அவசர ஆலோசனை கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, ஆக.4-

சென்னை, தெற்கு மாவட்ட இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகராஜா எம்.எல்.ஏ. அறிக்கை வரு மாறு:

இன்று 04-08-2023 மாலை 5:30 மணி அளவில் சரியாக மாவட்ட கழக அலுவலகத்தில் "சென்னை தெற்கு மாவட்ட இளை ஞரணி அவசர ஆலோச னைக் கூட்டம்" மாவட்ட இளைஞர் அணி அமைப் பாளர் ஏ.எம்.வி. பிரபாகர ராஜா எம்.எல்.ஏ. தலை மையில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம். விநயாகமூர்த்தி, சங்கர் கணேஷ், கிருஷ்ணகுமார், எழில் பாண்டியன், தியாக ராஜன், ராமாபுரம் ரவி, கோட்டூர் பிரகாஷ், முன்னி லையில் நடைபெறுகிறது.

மருத்துவம் மற்றும் மக் கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் மா. சுப்பிரமணியன் அவர்கள் கலந்து கொண்டு ஆலோ சனை வழங்குகிறார்.

எனவே சென்னை தெற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதி ஒன்றிய வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள் ளுமாறு கேட்டுக்கொள்கி றோம்.

இவ்வாறு அவர் அறிக் கையில் தெரிவித்துள்ளார்.

---

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு

**கோவை வடக்கு மாவட்டம், காரமடை நகரத்தைச் சேர்ந்த குட்டி (எ) கிருஷ்ணமூர்த்தி, வி.ரங்கசாமி, ஆர்.செல்வராஜ், மு.பிரதாப் ஆகியோர் தங்களது செய லுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவ டிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 03-08-2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.முக. செயற்குழுக் கூட்டம், வருகிற 06.08.2023 ஞாயிற்றுக் கிழமை காலை 11.00 மணியளவில் வாலாஜாபாத் உமா சேகர் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் ச. இனியரசு, தலைமையிலும் மாவட்ட துணை செயலாளர்கள் க.செல்வம் எம்.பி., டி.வி.கோகுலகண்ணன், கு.மலர்விழி, மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

எனவே, இக்கூட்டத்தில் சட்ட மன்ற உறுப்பினர் தலைமைசெயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் கள், மாநகர நகர ஒன்றிய பகுதி பேரூர் செயலாளர்கள், மாநில, மாவட்ட, கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள். 1. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா. 2. கழக ஆக்கப்பணிகள்.

**க.சுந்தர்** எம்.எல்.ஏ.,
செயலாளர் - காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட திமுக